**எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறு -2017**

---

எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் (ஜீஎவ்ஏரீஎம்) காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் (என்எவ்எம்) 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் எயிட்ஸ், காசநோய் மற்றும் மலேரியாவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதியத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 பெப்ரவரி 29 ஆம் திகதிய 857-எல்கேஏ-ரீ-எம்ஓஎச் ஆம் இலக்க மானிய உடன்படிக்கையின் இ(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி**

---

மானிய உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதார அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கலிற்கு பொறுப்பாக உள்ளது. அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளுடன் குறைவான சேவையளிக்கப்பட்ட பகுதிகளில் கூடுதல் கவனத்துடனான நடவடிக்கைகளை அதிகரித்து மேம்படுத்துவதன் ஊடாக நேரடி அவதானிப்பு சிகிச்சை குறுங்கால கற்கைநெறி (Directly Observed Treatment Short-Course) (டிஓரீஎஸ்) நிகழ்ச்சித்திட்டத்தின் வினைத்திறனை முன்னேற்றுவதன் மூலம் இலங்கையில் காசநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தினை வலுப்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மானிய உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் புதிய நிதியிடல் மாதிரிக்கான காசநோய் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக ஐ.அ.டொலர் 7.91 மில்லியன் தொகையானதுடன் முழுத் தொகையையும் ஜீஎவ்ஏரீஎம் ஆல் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 சனவரி 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி

செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் நன்கொடை முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) மானியத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) மானியத்தின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்.

(இ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(ஈ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(உ) மானிய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிசார் செயலாற்றல்

நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ஐ.அ.டொலர் 1,588,806 இற்குச் சமமான ரூபா 242,228,920 தொகையானதுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 358,630,817 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான செலவினம், முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பன கீழே பொழிப்பாக்கப்பட்டுள்ளன.

| வகுதி | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|---|---|
| | 2017 | | 2016 | | |
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா | ரூபா |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் | 169,801 | 25,887,480 | 16,121 | 2,475,850 | 28,363,330 |
| காசநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் | 1,419,005 | 216,341,440 | 782,480 | 113,926,047 | 330,267,487 |
| **மொத்தம்** | **1,588,806** | **242,228,920** | **798,601** | **116,401,897** | **358,630,817** |

**2.2.2 காசுப்பாய்ச்சல் கூற்று**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று நிலைமை கீழே தரப்பட்டுள்ளது.

| | 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | | 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கானது | |
|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் | ரூபா | ஐ.அ.டொலர் | ரூபா |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| வெளிநாட்டு உதவி – மானியத்திலிருந்து பெறப்பட்ட காசு | 1,181,871 | 180,188,023 | 720,805 | 104,822,167 |
| உள்நாட்டு நிதியங்களிலிருந்து பெறப்பட்ட காசு | 92,281 | 14,069,151 | 13,587 | 1,602,826 |
| ஏனைய வருமானம் | 154 | 23,500 | 234 | 34,000 |
| நேரடி பணவளிப்புக்கள் | 357,473 | 54,500,287 | - | - |
| வெளிநாட்டுப் பரிமாற்ற நட்டத்திற்கான சீராக்கங்கள் | | | (1,399) | - |
| நிகழ்ச்சித்திட்ட செலவினங்களிற்காக செலுத்தப்பட்ட காசு | (1,419,005) | (216,341,440) | (782,480) | (113,929,047) |
| ஆண்டிற்கான மிகை/ (பற்றாக்குறை) | 212,774 | 32,439,521 | (49,253) | (7,470,054) |
| வெளிநாட்டுப் பரிமாற்ற நட்டம்/ இலாபம் | 615 | - | - | - |
| பெறுமானத்தேய்வு | 47,805 | 7,288,395 | 63,628 | 9,649,938 |
| பணிக்கொடை | 9,630 | 1,468,216 | 38,921 | 5,902,909 |
| ஆண்டின் போது செலுத்தப்பட்ட பணிக்கொடை | (4,702) | (716,800) | | |

| | | | | |
|---|---|---|---|---|
| செலுத்த வேண்டியவைகளில் அதிகரிப்பு | 90,559 | 11,634,403 | (35,690) | (5,412,688) |
| பெற வேண்டியவைகளில் அதிகரிப்பு | (180,059) | (25,194,165) | | |
| | ------------ | ---------------- | ------------- | ----------------- |
| செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு | **176,622** | **26,919,570** | **17,606** | **2,670,105** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | | |
| நிலையான சொத்துக்கள் | (169,801) | (25,887,480) | (16,325) | (2,475,850) |
| | ------------- | ---------------- | -------------- | ----------------- |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | **(169,801)** | **(25,887,480)** | **(16,325)** | **(2,475,850)** |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசுப்பாய்ச்சல்** | | | - | - |
| நிதி அமைச்சிற்கு திருப்பியனுப்பப்பட்ட காசு | (6,821) | (1,032,090) | - | - |
| தீர்ப்பனவு செய்யப்படாத முற்பணம் | - | - | (1,281) | (194,254) |
| | ---------- | -------------- | ---------- | ------------- |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசு** | **(6,821)** | **(1,032,090)** | **(1,281)** | (194,254) |
| | ====== | ========= | ====== | ======== |
| காசில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு/ தேறிய குறைவு | இல்லை | இல்லை | இல்லை | இல்லை |

### 2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் காரணங்கள் காரணமாக செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட காசு முற்பணங்கள் மீதான நிதிக் கட்டுப்பாடுகள் போதுமானளவு பின்பற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது.

(அ) நிதிப்பிரமாணம் 371(5) மற்றும் 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளிற்கு முரணாக 31 சந்தர்ப்பங்களில் ரூபா 100,000 ஆகக்கூடிய எல்லையை விஞ்சி ரூபா 29.59 மில்லியன் கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) செயல்நிமித்த உப கட்டுநிதிகள் உரிய நோக்கத்திற்கு முன்னரான திகதியில் உடனடியாக வழங்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 44 சந்தர்ப்பங்களில் ரூபா 2.91 மில்லியன் கூட்டுத்தொகையான உப கட்டுநிதிகள் உரிய திகதிக்கு 14 நாட்களிற்கு முன்னரே வழங்கப்பட்டிருந்தன. மேலும் 36 சந்தர்ப்பங்களில் ரூபா 6.90 மில்லியன் கூட்டுத்தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதிகள் உரிய நோக்கங்களிற்காக பயன்படுத்தப்படாது 01 மாதம் தொடக்கம் 11 மாதங்கள் வரையான தாமதங்களுடன் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தன.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியங்களின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு, மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான குறித்த சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன

| மூலம் | மானிய உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜீஎவ்ஏரீஎம் | 7.91 | 1,033.99 | 3.86 | 1.54 | 234.70 | 3.13 | 466.32 |
| இலங்கை அரசாங்கம் | - | - | - | 0.09 | 14.07 | 0.10 | 15.67 |
| **மொத்தம்** | **7.91** | **1,033.99** | **3.86** | **1.63** | **248.77** | **3.23** | **481.99** |

மேற்படி தகவல்களின் பிரகாரம், செயற்திட்டக் காலப்பகுதியின் போது பயன்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா 1,033.99 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 7.91 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 481.99 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 3.23 மில்லியன் மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மீளாய்வாண்டிற்கான நிதி இலக்குகளை அடைந்துகொள்ளத் தவறியதன் காரணமாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1.03 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 6,821 உள்ளடங்கலாக ரூபா 6.35 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 41,955 மீளாய்வாண்டின் இறுதியில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சிற்கு மீளளிக்கப்பட்டிருந்தது.

### 3.2 பௌதீக செயன்முன்னேற்றம்

புதிய நிதியிடல் மாதிரிக்கான காசநோய் கட்டுப்பாட்டின் செயன்முன்னேற்றம் நாளதுவரையாக்கல் மற்றும் பணவளிப்பு வேண்டுதல் என்பவற்றின் பிரகாரம், மீளாய்வாண்டிற்காக 11 பாதீட்டு கிரய வகைப்படுத்தலூடாக 446 பாதீட்டு வரிசை நடவடிக்கைகள் பட்டியல்படுத்தப்பட்டிருந்தன. ரூபா 118.06 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 903,224 ஒதுக்கீடு 05 பாதீட்டு வரிசை நடவடிக்கைகளின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 33.86 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 259,059 மாத்திரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், ஏனைய 03 பாதீட்டு கிரய வகைப்படுத்தல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ரூபா 47.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 366,043 ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 17.68 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 135,263 இனை செயற்திட்டம் செலவிட்டிருந்தது. பின்வரும் மேலதிக அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பதிவு செய்யப்படாத காசநோயாளர்களை இனங்கண்டு சிகிச்சைக்காக அவர்களை வழிநடாத்துதல் மற்றும் நோயாளர்களிற்கான சிகிச்சை நிலையங்கள், அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் என்பவற்றிற்காக பொதுச் சுகாதார பரிசோதகர்கள், தாதியர்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய பொருத்தமான தரப்பினர்களினை பயிற்றுவிப்பதற்காக 217 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக ரூபா 17.3 மில்லியன் ஒதுக்கீடு மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது 120 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீது ரூபா 7.10 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சால் நோயாளர்களின் பதிவேடுகளை பேணுவதற்கான பொறிமுறை காணப்படாமை மற்றும் இறப்புக்களின் தன்மையை வெளிப்படுத்துவதற்கு நோயாளர்கள் தயக்கம் காட்டுதல் போன்ற சில காரணங்களினால் காசநோயாளர்கள் மற்றும் அவர்கள் தொடர்பாக ஏற்பட்ட இறப்புக்கள் போன்ற தகவல்கள் வரிசை அமைச்சில் தயார் நிலையில் கிடைக்கக்கூடியதாக காணப்படாதமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

### 3.3 நிதிக் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போதான செயற்திட்டத்தின் கொடுக்கல்வாங்கல்கள் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2008 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 25.42 மில்லியனிறிகுச் சமமான ஐ.அ.டொலர் 167,992 கிரயத்தில் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பில் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பௌதீக மெய்மையாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகை நடைமுறைகள் தொடர்பான விடயங்கள

களுத்துறையிலுள்ள தேசிய சுகாதார மற்றும் விஞ்ஞான நிறுவகத்திலுள்ள மார்பக சிகிச்சை நிலையம், யாழ்பாணத்திலுள்ள போதனா வைத்தியசாலை மற்றும் கேகாலையிலுள்ள மாவட்ட மார்பக சிகிச்சை நிலையம் என்பவற்றின் பயன்பாட்டிற்காக ரூபா 21.66 மில்லியன் கிரயத்தில் மீளாய்வாண்டின் போது 03 ஜென எக்ஸ்பேற் இயந்திரங்களை (Gene Xpert Machine) செயற்திட்டம் கொள்வனவு செய்திருந்தது. கொடையளிக்கும் முகவரின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் 05 மாதங்கள் தாமதத்துடன் 2017 ஆகஸ்ட் 10 இல் அவற்றின் மீதான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு நியமனம் செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் வழங்குவதற்கு இணங்கப்பட்ட திகதியிலிருந்து 04 கிழமைகள் தொடக்கம் 06 கிழமைகள் வரையிலான காலவீச்சிலான தாமதங்களுடன் 2017 திசெம்பர் 27 மற்றும் 2018 சனவரி 11 இல் தெரிவு செய்யப்பட்ட கேள்வியாளரினால் உரிய இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. மேலும், செயற்திட்டக் கண்காணிப்புப் பிரிவு அவற்றின் மீது விடுவிக்கப்பட்ட ரூபா 2.20 மில்லியன் தொகையான முற்பணங்கள் தொடர்பாக ஒப்பந்த உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்கோ அல்லது உத்தரவாதப் பிணைமுறியொன்றை பெற்றுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.5 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான எயிட்ஸ், காசநோய் மற்றும் மலோரியவினை ஒழிப்பதற்கான உலகளாவிய நிதிய செயற்திட்டத்தின் காசநோய் புதிய நிதியிடல் மாதிரிக் கூறின் நிதிக்கூற்றுக்கள் மீது பட்டயக் கணக்காளர் நிறுவனமொன்றால் தனியான கணக்காய்வு அறிக்கை சுகாதார, போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் மீது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதன் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் ஒத்துழைப்பு கோரப்பட்டிருக்கவில்லை

**3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்**

செயற்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 80 ரீபீ உதவியாளர்களை உள்ளடக்கியிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது 60 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையிலிருந்தனர். மாவட்ட கலாச்சார நிலையங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் நுண்ணியிரியல் நிலையங்களின் கடமைகள் ரீபீ உதவியாளர்களின் பற்றாக்குறைகள் காரணமாக திருப்திகரமாக ஆற்றப்பட்டிருக்கவில்லை. மேலும் 10 தோட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் 09 தரவு பதிவு செயற்பாட்டாளர்களின் பதவிகள் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிட்டத்தட்ட 02 ஆண்டுகளிற்கு மேலாக வெற்றிடமாக இருந்தன.